(பதிப்புரிமையுடையது)

உ
சிவமயம்



விவேகானந்த சபை கொழும்பு
அகில இலங்கை



10 சைவசமய பாடப்பரீட்சை : 2022
தரம் பத்து

nselva.com

கால அளவு	2.30 மணி

புள்ளிகள் : 100

இல.	
மாணவர் சுட்டெண்:	

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. பகுதி ஒன்றிற்கு இத்தாளிலேயே விடை எழுதுக.

பகுதி - I

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. சைவம் வழிப்படுத்துகின்ற வாழ்க்கை நெறி ஆசாரத்தோடு கூடியது. இங்கு ஆசாரம் என்பது.
   1) இறையுணர்வு 2) பண்பு 3) ஒழுக்கம் 4) கடமையுணர்வு
2. அட்டாங்க யோகங்களுள் ஒன்றான நியமத்துள் **அடங்காதது** எது?
   1) மனத்திருப்தி 2) தெய்வ சிந்தனை 3) வாய்மை 4) தவம்
3. உயிர்களிடம் அன்பு வைப்பவன் தெய்வ நிலை எய்தி விடுகிறான் என்று கூறியவர் யார்?
   1. மகாத்மா காந்தி 2) திருவள்ளுவர் 3) திருமூலர் 4) சேக்கிழார்
4. "உற்றுமை சேர்வது மெய்யினையே....." என்ற திருப்பாடலில் உள்ள சிலேடைச்சொல் அல்லாதது எது?
   1) கனல் 2) மெய் 3) காமன் 4) பணி
5. விநாயக சஷ்டி விரதம் அனுஷ்டிக்கப்படும் நாட்கள் எத்தனை?
   1) 7 2) 6 3) 14 4) 21
6. எந்தக் காலத்தில் சுவாமி தரிசனம் செய்தல் ஆகாது?
   1) அபிஷேகம் 2) ஆராத்தி 3) திருப்பாடல் ஓதுதல் 4) வீதி உலாவருதல்
7. இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழுக்கான முதலாவது பேராசிரியர் யார்?
   1) ஆறுமுகநாவலர் 2) விபுலானந்தர்
   3) இராமகிருஷ்ணர் 4) சேர். பொன். இராமநாதன்
8. "மாதர் பிறைக்கண்ணியானை" என்ற பதிகத்தைப் பாடியவர் யார்?
   1. சம்பந்தர் 2) நாவுக்கரசர் 3) சுந்தரர் 4) மாணிக்கவாசகர்
9. எந்தத் திருப்பாடல் பாடியபோது பாண்டியமன்னனுக்கு வெப்பு நோய் ஏற்பட்டது?
   1. போகமார்ந்த பூண்டுலையான் 2) அவ்வினைக்கிவ்வினை
   3) இடரினும் தளரினும் 4) செய்யனே திருவாலவாய்
10. மகோற்சவத்தின் போது சிவாச்சாரியார் தமக்கும் உற்சவ மூர்த்திகளுக்கும் கட்டும் காப்பு எவ்வாறு அழைக்கப்படும்?
    1. சூர்ணோற்சவம் 2) இரட்சாபந்தம் 3) மௌனோற்சவம் 4) கொடியேற்றம்
11. கோயில்களிலே தினமும் எத்தனை காலப்பூசை நடைபெறும்?
    1) ஆறு 2) மூன்று 3) நான்கு 4) இரண்டு
12. நித்திய பூசை நடைபெறாத ஆலயம் ஒன்று தருக.
    1) போரைதீவு பத்திரகாளியம்மன் 3) மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம்
    2) கதிர்காமம் 4) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம்

13. வருடத்திற்கு மூன்று முறை திருவிழாக்கள் நடைபெறும் ஆலயம் எது?
1) கதிர்காமம் 2) ஈழத்துச் சிதம்பரம்
3) நல்லூர்க் கந்தசுவாமி கோயில் 4) களுதாவளைப் பிள்ளையார் ஆலயம்

14. திலகவதியாரின் கணவனின் பெயர் என்ன?
1) மருணீக்கியார் 2) கலிப்பகையார் 3) புகழனார் 4) கூன்பாண்டியன்

15. திருத்தொண்டர் தொகையை பாடியருளியவர் யார்?
1) சுந்தரர் 2) சேக்கிழார்
3) அருணந்தி சிவாச்சாரியார் 4) மெய்கண்ட தேவர்

16. கபிலதேவநாயனாரால் பாடப்பட்ட பதினோராம் திருமுறையில் காணப்படும் பதிகம் எது?
1) திருமுருகாற்றுப்படை 2) பொன்வண்ணத் தந்தாதி
3) திருவிரட்டை மணி மாலை 4) திருவாலவாய் காட்டுத் திருப்பதிகம்

17. திருக்கழுமலம் என்ற பெயரால் அழைக்கப்படும் இடம் எது?
1) சீர்காழி 2) திருமருகல் 3) திருசெங்காட்டங்குடி 4) திருவானைக்கா

18. காலத்தால் முந்திய இசைநூல் எனப்படுவது எது?
1) யசுர் வேதம் 2) சாம வேதம் 3) அதர்வண வேதம் 4) ஆரண்யகங்கள்

19. இந்து சமயத்தில் குமரக்கடவுளை முழுமுதற் கடவுளாகப் போற்றும் பிரிவு எவ்வாறு அழைக்கப்படும்?
1) சௌரம் 2) கௌமாரம் 3) சாக்தம் 4) வைஷ்ணவம்

20. பொன்னுருக்கின் போது இருவீட்டார் வளவுகளிலும் பெரியார்களால் நடப்படும் மரம் எது?
1) முள்முருங்கு மரம் 2) அரசமரம் 3) அறுகு 4) ஆல்

21. பின்வருவனவற்றுள் எது பூர்வ கிரியையில் அடங்கும்?
1) அன்னப்பிராசனம் 2) அந்தியேட்டி 3) சபிண்டீகரணம் 4) சிரார்த்தம்

22. தீபாவளிப் பண்டிகை ஐப்பசி மாத எந்த திதியில் கொண்டாடப்படும்?
1) வளர்பிறை சதுர்த்தசி 2) தேய்பிறை சதுர்த்தசி
3) வளர்பிறை ஏகாதசி 4) தேய்பிறை ஏகாதசி

23. மனிதனிடம் உள்ள அசுரப்பண்புகள் அல்லாதது எது?
1) காமம் 2) பொறாமை 3) ஈதல் 4) செருக்கு

24. புரட்டாதிச்சனியன்று நைவேத்தியமாக வைக்கப்படும் சாதம் எது?
1) புளிச்சாதம் 2) தயிர்ச்சாதம் 3) சர்க்கரைச்சாதம் 4) எள்சாதம்

25. சித்திரை வருடப்பிறப்பின் போது சூரியன் எந்த ராசியில் பிரவேசிக்கின்றார்?
1) கடகராசி 2) மிதுனராசி 3) மேடராசி 4) மீனராசி

26. வாய்மை என்னும் அறத்தைப் பேணுபவன் எத்தகைய துன்பங்களுக்கு ஆளான போதிலும் இறையருள் பெறுவான் என்பதை உணர்த்தும் கதை எது?
1) திலவதியார் கதை 2) மார்க்கண்டேயர் கதை
3) அரிச்சந்திர மகாராஜா கதை 4) பாண்டியமன்னனின் கதை

27. தவம் செய்தல் என்பதற்குரிய சரியான விளக்கம் எது?
1) உணவைச் சுருக்குதல் 2) உறக்கத்தைக் குறைத்தல்
3) பிறரிடம் அன்பு காட்டல் 4) ஏழை மக்களுக்கு உதவுதல்

28. நாம் மற்றவருக்கு செய்யும் பாவ காரியங்களுள் ஒன்று **அல்லாதது** எது?
1) மற்றவருக்கு இரங்குதல் 2) கடுஞ் சொற்பேசுதல்
3) பொய் பேசுதல் 4) புலாலுண்ணல்

29. "ஊர் கூடித் தேர் இழுத்தல்" என்ற மரபுத் தொடர் விளக்குவது?
1) சமுதாய உணர்வை 2) கடமையுணர்வை
3) இறையுணர்வை 4) அற உணர்வை

30. பஞ்சபுராணம் பாடும்போது திருப்பல்லாண்டு எத்தனையாவதாகப் பாடப்படும்?
1) மூன்று 2) நான்கு 3) இரண்டு 4) ஐந்து

(30 x 1 = 30 புள்ளிகள்**)**

பகுதி - II

1. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. பூரணையை இறுதி நாளாகக் கொண்டு மாதத்தைக் கணிக்கும் முறை எவ்வாறு அழைக்கப்படும்?
2. வசிட்ட முனிவரின் மனைவியின் பெயர் என்ன?
3. சுந்தரர் தான் இழந்த வலக்கண்ணை மீண்டும் பெற்ற தலம் எது?
4. எந்த முனிவரின் மகனுக்கு இறைவன் பால் வேண்டி அழுதபோது திருபாற்கடலை உண்ணக் கொடுத்தார்?
5. சிவஞான சித்தியார் என்ற நூலின் இரு பகுதிகளும் எவை?
6. கூடுவிட்டுக் கூடு பாயும் சித்தத்தின் மூலம் மூலனின் உடம்பில் புகுந்த யோகி எந்த ஆலயத்தின் அரசமரத்தின் கீழ் சீவன் முத்தரானார்?
7. கொல்லி மழவன் என்ற அரசரின் மகள் என்ன நோயால் வாடினாள்?
8. வேதங்களை அருளியவர் யார்?

(8 x 2 = 16 புள்ளிகள்**)**

2. பின்வரும் திருப்பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது எழுதி அதன் பொழிப்புரையையும் எழுதுக.

1. "அங்கமும் வேதமும் ....."
2. "பால் நினைந்து ஊட்டும் ....."
3. "தந்தது உன்தன்னை ....."
4. "தண்ணளி வெண்குடை ....."
5. "பொய்யுரை நூல்சில புகலுந் ....."

(5 x 2 = 10 புள்ளிகள்**)**

3. பின்வரும் குறட்பாக்களுள் எவையேனும் நான்கினை எழுதுக.

1. "ஒறுத்தாரை ஒன்றாக ....."
2. "அழுக்காற்றின் அல்லவை ....."
3. "நடுவின்றி நன்பொருள் ....."
4. "பிறன்பழி கூறுவாள் ....."
5. "உள்ளத்தால் பொய்யாது....."

(4x1 = 4 புள்ளிகள்**)**

பகுதி - III

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. "கடவுள் ஒருவரே அவர் எல்லா உயிர்களுக்கும் உயிராக விளங்குகிறார்"

அ. கடவுளுக்கு நிர்விகாரி, குணாதீதர் என்ற பெயர்கள் வரக் காரணம் என்ன?
நிர்விகாரி .....
குணாதீதர் .....

ஆ. சைவ சமயத்தில் கூறப்படுகின்ற புற ஆசாரம், அக ஆசாரம் என்பவற்றுக்கு இரு உதாரணங்கள் தருக.
புற ஆசாரம் .....
அக ஆசாரம் .....

இ. இறைவனுக்கு அகப்பூசையில் சாத்தக்கூடிய ஏதாவது நான்கு மலர்களைக் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்**)**

2. "பெரிய புராணத்தின் ஒருபகுதியாக திருக்கூட்டச்சிறப்பு காணப்படுகிறது."

அ. திருக்கூட்டச் சிறப்பிலே விரிந்துரைக்கப்பட்ட சிவனடியார்களின் பெருமைகள் இரண்டு தருக?

ஆ. தேவாசிரிய மண்டபம் ஆயிரம் பாற்கடல் போல ஒளி வீசுவதின் காரணம் என்ன?

இ. ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈஉன் பணிஅல தொன்றிலார்..... என்றபாடல் வரிகளை விளக்குக.

(10 புள்ளிகள்**)**

3. "சைவ சமயத்திற்கு தொண்டாற்றிய பெண் அடியார்களுள் திலகவதியாரும் ஒருவர் இவர் திருநாவுக்கரசரின் தமக்கையார் ஆவார்"

அ. திலகவதியார் தொண்டாற்றிய திருத்தலம் எது? அங்கே திருநாவுக்கரசரால் பாடப்பட்ட பாடல் எது? அப்பாடல் பாடப்பட்ட சந்தர்ப்பம் எது?

ஆ. திருக்கயிலையில் உள்ள இறைவனின் கோலத்தை நாவுக்கரசர் எங்கு கண்டார்? அங்கு அவரால் பாடப்பட்ட பாடல் எது?

இ. அந்தணர் மகனை உயிர்ப்பித்த திருத்தலம் எது?

(10 புள்ளிகள்**)**

4. "பின்வரும் அட்டவணையை நிரப்புக"

அ. சமயப்பெரியார்கள்

அன்பு வழியில் நின்று பக்தி பனுவல்கள் பாடியவர்கள் A. ..... எனப்படுவார்கள்.	அறவுவழியில் இறைவனை அடைய சைவசித்தாந்த கருத்துக்களுக்கு விளக்கம் செய்தவர்கள் B. ..... எனப்படுவார்கள்.
அவர்கள் நால்வரின் பெயரினை புள்ளிக்கோட்டில் நிரப்புக.	அவர்கள் நால்வரின் பெயரினை புள்ளிக்கோட்டில் நிரப்புக.
1.	1. .....
2.	2. .....
3.	3. .....
4.	4. .....

2. பின்வரும் நூல்களை எழுதிய சமயப் பெரியோரின் பெயரினை புள்ளிக்கோட்டில் நிரப்புக.
1. மனவாசகம் கடந்தார்..... 2. சிவஞான சித்தியார் .....
3. இருபா இரு.்பது .....

3. சிவஞானபோதத்தின் சிறப்பு யாது? **(10** புள்ளிகள்**)**

5. "மகோற்சவம் இறைவனின் ஐந்தொழில்களை உணர்த்துகிறது."

அ. படைத்தலைக் குறிக்கும் மகோற்சவ நிகழ்வுகள் மூன்று தருக.

ஆ. கிராம சாந்தி, வாஸ்து சாந்தி, என்பனவற்றை விளக்குக.

இ. மகோற்சவத்தில் நிகழும் திருக்கல்யாணம் எதனை விளக்குகிறது? .....

(10 புள்ளிகள்**)**

6. பின்வருவனவற்றில் எவையேனும் <u>இரண்டிற்குச்</u> சிறுகுறிப்பு எழுதுக.

அ. கந்தசஷ்டி

ஆ. வேதங்கள்

இ. திருமந்திரத்தின் சிறப்புகள்

ஈ. ஆன்மாக்கள்

(10 புள்ளிகள்**)**